# சுட்டி

ஜூன் '85
60 கா




FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,




வடிவமைப்பு: சிறபி. வி. மாணிக்கம்

FREE E-BOOKS , www.thamizham.net ,





அரசியல்வாதிகளை உருவாக்கும், ஆட்டிப் படைக்கும் சிலர் வெளியே இருக்கிறார்கள். சிலர் உள்ளே ஒளிந்திருக்கிறார்கள்.

# வரதராஜன் முதலியார் சிக்குவாரா?

பம்பாயின் கயமை நிறைந்த பாதாள உலகின் முடிசூடா மன்னன் பச்சைத் தமிழன் வரதராஜ முதலியார். அண்மையில் இவர் காவல்துறை அதிகாரிகளுடன் பேரம் பேசியது டேப்பில் பதிவாகி, இந்தியாவெங்கும் நாளிதழ்களில் பரபரப்பாக வெளியானது. அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இவரது கூட்டுக் களவாணியில் பங்குதாரர்களாக இருந்திருக்கிறார்களா?

ரூ.1.25 நாள் கூலியில் மோட்டார் மெக்கானிக்காக பம்பாயில் வாழ்வைத் தொடங்கி, ரயில்வே போர்டர், கள்ளச் சாராய விநியோகி என்று உழைப்பால் உயர்ந்த இவரைப் பற்றி 70களில் பம்பாய் காவல்துறை பதிவேடுகள் கள்ளச் சாராயம், விபச்சாரம், சூதாட்டம், துறைமுகத் திருட்டு, கள்ளக் கடத்தல் இவற்றில் சம்மந்தப்பட்டவராகக் காட்டுகின்றன. 1974 முதல் 77 வரை உள்ளே இருந்துவிட்டு (பாதுகாப்பு சட்டத்தின் கீழ்) வெளியே வந்தவர்தான், பின்னால் யாரும் எதுவும் இவரை செய்ய முடியவில்லை.

எம்.ஆர். ராதா ஏற்கும் வில்லன் பாத்திரம் உயிர் பெற்று வந்தால் அது தான் வரதராஜன் முதலியார். ராதாவின் அதே தொண்டை; சாயல் கூட! இன்று பம்பாய் ரௌடிகள், குண்டர்கள் இவரது விரல் நுனியில்! குடிசைப் பகுதிகளின் வாத்தியார்! இவரது பேட்டை வரதராஜன் நகர் என்று பெயரிடப்பட்டு இவரது தர்பார் நடக்கிறது. குடிசைப்பகுதி தகராறுகளுக்கு இவர் தீர்ப்பு வழங்கி நீதி பரிபாலனம் செய்வார். கட்டணம் அதற்கு வசூலிப்பார்.


இவரது பேட்டையில் பர்மிட் இன்றி கிடங்குகள் கட்டித் தள்ளுவார். வெளியே பார்த்தால் காகித பிளாஸ்டிக் குப்பைகள் — உள்ளே கடத்தல் சேமிப்பு. தன் கையாட்களுக்கு உதவ இந்தப் பகுதியில் கடைகள் கட்டினார். போலீஸ் இடித்துத் தள்ளியது. வரதாபாய் மேலோரை தரிசித்தார். அமைச்சர் இடிபாடுகளைப் பார்வையிட்டு, 'இனி யாரும் இடித்தால் தெரியும் சேதி' என்று காவலர்க்கு ஆணையிட்டுச் சென்றார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இவரது பகுதியில் சென்ற தேர்தலில் நின்ற காங்கிரஸ் வேட்பாளர் இவரது ஆசிபெற்றே போட்டியிட்டார்; வென்றார்.

மராட்டிய மாநில முதலமைச்சரின் மனைவி, இவர் பொது நிலத்தில் கட்டிய கோவில்களில் ஒன்றை சிறப்பாக திறந்து வைத்தார்.

இவரது மகளின் திருமணம் மே 1983 இல் சென்னையில் நடந்த போது முதல்வர் எம்.ஜி.ஆரும் அவரது மனைவியும் முக்கிய விருந்தினராக வந்து விழாவைச் சிறப்பித்தனர்.



பம்பாய் மாநில சட்டசபைக்கு சமீபத்தில் ஸ்ரீலங்காவில் தமிழர் படுகொலையை கண்டித்து இவர் ஊர் ஊர்வலம் நடத்தியபோது தனி ரயிலே தாதரிலிருந்து வி.டி.க்கு விடச் செய்தார். தமிழக எம்.பி.க்கள் பலர் இதில் பறந்து வந்து கலந்து கொண்டனர்.

தர்ம கைங்கரியங்கள், கோயில் திருப்பணிகள், தமிழ்ப் பேரவை, இரத்த தான முகாம்கள் இவற்றை நடத்தும் பெரிய மனிதராகி விட்ட இவரிடம் இவர் மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி கேட்ட போது "எல்லாம் கட்டுக்கதை. அதிக பிரதிகள் விற்பதற்காக என்னைப் பற்றி கண்டபடி எழுதுகிறார்கள்" என்கிறார். ஆனால் சென்ற ஆண்டு போலீஸ் கோப்புகளில் இவர் ரூ.47.66 லட்ச கள்ளக்கடத்தல் விவகாரத்தில் சம்மந்தப்படுகிறார்! இவரை உள்ளே தள்ள சிபாரிசு செய்யப்பட்டது. போதிய சாட்சிகள் இல்லையென்று மாநில உள்துறை அமைச்சர் இந்த சிபாரிசை உதறித் தள்ளினார். சென்ற ஆகஸ்டில் இன்னொரு கள்ளக்கடத்தலில் தரையிறக்கும் ஏஜெண்டாக இவரை நிரூபிக்க முயன்றனர். சம்பவ நேரத்தில் நீரழிவு நோய்க்காக சென்னையில் சிகிச்சை பெற்றதாக ஆதாரம் காட்டி,தப்பித்தார்.

சட்டவலையில் இவரைச் சிக்க வைக்க டி.எஸ்.பி. பவர் தன் உயிரைப் பணயம் வைத்து (அரசு, காவல்துறை ஆதரவின்றியும்) முயல்கிறார். போலீஸ்காரருடன் இவர் பேரம் பேசிய விவகாரம் பதிவு செய்யப்பட்டபோது "என் குரலை யாரோ திறமையாக இமிடேட் செய்திருக்கிறார்கள். எனக்கு சம்மந்தமில்லை" என்றார். வரதன் ஒரு விலாங்கு மீன். தமிழ்நாட்டில் இவர் தலைமறைவாகியிருக்கிறார் என பம்பாய் போலீஸ் கருதுகிறது.

—— ஸ்டெனிஸ் லாஸ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

நம்முடைய பத்திரிகைகள் குற்றவாளிகளுக்கு விளம்பரம் தருவதிலே காட்டுகின்ற தீவிரத்தில் பாதியைக் கூட பாதிக்கப்பட்டவரிடம் காட்டுவதில்லை. குற்றவாளி மீது அக்கறையும், சலுகைகளும் அவன் கைது செய்யப்படுவதற்கு முன்பே கூட, குற்றம் நடந்த நிமிஷத்திலிருந்தே காட்டப் படுகின்றன. ஆனால், எதிர்த்தரப்பில் அந்தக் குற்றவாளியால் பாதிக்கப்பட்டவரை பத்திரிகையும் சமூகமும் நினைக்கவும் கூட புறக்கணித்து விடுகின்றன.

# தண்டனை

## ஒரு மறு மதிப்பீடு

இனக் குழுக்களாக மக்கள் வாழ்ந்த காலத்தில் (Pre educational Societies) இது போல பாதிக்கப்பட்டவனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் பாதித்தவனும், அவனுடைய உறவினர்களும், ஒருகுறிப்பிட்ட தொகை கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருந்தது. இதனால் குற்றங்களைத் தடுக்கக்கூடிய சிறந்ததொரு நடைமுறை அன்றைய மக்களால் கையாளப் பட்டுவந்தது. இன்றைய விண்வெளி நாகரிக காலத்தில் இதைப்பற்றிய சிந்தனையே இன்னும் வரவில்லை.

அண்மையில் நியூசிலாந்து நாட்டில் இதற்காக ஒரு இயக்கமே தொடங்கப்பட்டுள்ளது. தண்டனை என்பது குற்றவாளியைமட்டுமே நோக்காமல், பாதிக்கப்பட்டவரின் இழப்பையும் ஈடு செய்வதாக இருக்க வேண்டும். இதுதான் சமூக நீதியாக இருக்க முடியும் என்பது அந்த இயக்கத்தின் கொள்கை. அதாவது குற்றவாளியின் மறுவாழ்விலும் அக்கறைப்படுவதுடன், பாதிக்கப்பட்டவரின் மறுவாழ்விலும் சமூகம் அக்கறைப்பட்டாக வேண்டும்.

இதைப்பற்றிக்கூட நாம் இன்னும் சிந்திக்கவில்லையே. நாம் எப்பொழுது குற்றங்களே உருவாகாத-அதற்கான சூழ்நிலைகளே இல்லாத — ஒரு சமத்துவ சமூக அமைப்பைப் பற்றிச் சிந்திக்கப்போகிறோம்?..

— நளினி : லால்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சுந்தர ராமசாமி சொன்னது...

● நிகழ்கால தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி...?

★ "நிகழ்கால தமிழ் இலக்கியத்தில் சாதனைகள் மிகக் குறைவு. இச்சாதனைகளும் பத்திரிகை உலகத்திற்கு வெளியே தான் இன்று நிகழ்ந்து வருகின்றன. பத்திரிகைகள், அரசாங்கம், கல்வி நிலையங்கள் — ஆகியவற்றால் இச்சாதனைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப் படுகின்றன. ஆகவே, இவை குறைந்த அளவு வாசகர்களையே எட்டுகின்றன. பிரபல பத்திரிகையில் வரும் ஜனரஞ்சகத் தயாரிப்புகள் எதுவும் இலக்கியம் அல்ல! பணம், புகழ் — இவற்றை நோக்கமாகக் கொண்டு, வாசகனின் பலவீனங்களைச் சுரண்டும் இத் தயாரிப்புகள் பத்திரிகைகளால் வெளியிடப்பட்டு, அரசாங்கத்தால் கௌரவிக்கப்பட்டு, கல்வி நிலையங்களால் போற்றப்படுகின்றன!"

● தற்போதைய மக்கள் தொடர்பு சாதனங்கள் பற்றி...?

★ "பொதுவாக இவை சீரழிந்தவை! பின் தங்கிப் போனவை! வணிக நோக்கங்களை மட்டுமே கொண்டவை! அரசின் குறுகிய நோக்கங்களுக்கு ஒத்துப் போகக் கூடியவை!"

● ஒட்டு மொத்தமான சமுதாய மாற்றத்திற்கு கலை, இலக்கியம் என்ன செய்ய வேண்டும்?

★ "ஒட்டு மொத்தமான சமுதாய மாற்றத்திற்கு நேரடியாக கலை, இலக்கியங்கள் எதுவும் செய்ய முடியாது. கலை, இலக்கியங்கள், மனித அனுபவங்களின் தளங்களில் ஜீவிக்கின்றன. அந்த அனுபவங்களுக்கு செழுமையையும் ஆழத்தையும் அளிக்கின்றன. மனிதனுக்கும் வாழ்க்கைக்குமான உறவுகள், கலை, இலக்கியம் மூலம் செழுமை பெறுகின்றன. நேரடியான செயல்பாடு மூலமே சமுதாயத்தை மாற்ற முடியும். இது போன்ற ஒரு எழுச்சி, இந்திய சமுதாயத்தில் ஏற்படும் எனில், இந்தியக்கலை, இலக்கியங்களும் அந்த எழுச்சியால் இயற்கையான பாதிப்புப் பெறும்!"

குடிசை இதழிலிருந்து
குளச்சல் இப்ராஹிம்

---

**கத்தியின்றி...**

**ரத்தமின்றி...**

கத்தி —
வெள்ளையனிடம்
இருந்தது
ரத்தம் —
நாங்கள் சிந்தினோம்
சுதந்திரம் —
நீங்கள் பெற்றீர்கள்

- சேதையின் மைந்தன்,

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இரண்டு துருவங்கள்



"இதோ பார் லீலா! பெண்ணுரிமைன்னு இஷ்டம் போல சுத்தறதுன்னு அர்த்தம் இல்லே! அதை நீ புரிஞ்சுக்கோ?" மாலினி கண்டிப்பாகக் கூறினாள்.

"சும்மா இரு! உனக்கென்ன தெரியும் பெண்ணுரிமை பத்தி? மேடையிலே பேசிட்டா போறும்னு நினைச்சிட்டிருக்கியா? இதுவரையில் ஒரு விஷயத்துலேயாவது ஒன் கணவரை எதிர்த்து நீ பேசியிருக்கியா?"

"என்ன லீலா? முட்டாள்தனமா பேசறே? எனக்கும் அவருக்கும் எந்த விதமான அபிப்ராய பேதமும் வராதப்போ எதுக்காக நான் அவரை எதிர்த்துப் பேசணும்?"

"நீ வேஷம் போடறே! மேடையிலே ஆவேசமா நீ பெண்ணுரிமையைப் பத்திப் பேசறே! வீட்டிலே அடிமையா இருக்கே!"

"மக்கு! வீட்டுலே நான் அரசியாத்தான் இருக்கேன்! காலையிலே சில நேரம் கிளம்பினா, திரும்பி வர்றப்போ ராத்திரி ஒன்பது பத்து கூட ஆயிடும்! அப்பல்லாம் என் கணவர் "லேடீஸ் கிளப்புக்காக இப்படியா நீ அலையறது? சரிசரி! போய்ச் சாப்பிடு" அப்படின்னுவார். வெளியூர்க் கூட்டங்களுக்குப் பேசப் போனா, வர ரெண்டு நாளாகும்! குழந்தைங்களை வெச்சிக்கிட்டு அட்ஜஸ்ட் பண்ணிப்பார்..."

"இதெல்லாம் செய்தா உரிமை கொடுக்கறதா அர்த்தமா? ஸில்லி! எங்கே ஒரு பாய் பிரெண்டோட சினிமா போயிப்பாரு!"

"பாய் பிரெண்டோட சினிமாவுக்குப் போயிட்டா நீ முழு உரிமை உடையவள்னு ஆயிடுமா? லீலா! என் கணவருடைய நண்பர்கள், என் இலக்கிய நண்பர்கள் இவங்களோட நான் நல்லாத்தான் பேசறேன்! பழகறேன்! ஒரு எல்லைக்குள்ளே... நீ சொல்ற மாதிரி போறது இல்லை தான் தாயே!"

FREE E- BOOKS , www.thamizham.net.,

"பாத்தியா? பழமை வட்டம் தடுக்குது..." கை கொட்டி சிரித்தாள் லீலா.

எவனோ ஒருத்தன் பின்னால் லீலா தொற்றிக் கொண்டாள் பைக் பறந்தது.

●●"எங்கே மீனாட்சி கிளம்பறே?"

"என் வூட்டுக்காரரு 'இது' இல்லைன்னா இருக்கவே இருக்காது! அதான் ஒரு இருநூறு வாங்கிட்டு வரப்போறேன்!"

"ம்! நீயே வாங்கப் போறியா? நல்லாத்தான் இருக்கு! குடிச்சிட்டு உன்னையே அடிச்சி நொறுக்குவான்!"

"கல்லானாலும் கணவன்... புல்லானாலும் புருஷன்... பொட்டைக் கழுதையாப் பொறந்திட்டேனே! இன்னா பண்றது?"

லீலா... மீனாட்சி... இருவருக்குமே தம் தவறுகள் புரியவில்லே.

— அரசு மணிமேகலை

## குடும்பக்கட்டுப்பாடும் இந்து முன்னணியினர் அறிவிப்பும்

"இந்துக்களே! குடும்பக்கட்டுபாடு அறுவை சிகிச்சை செய்யாதீர்கள்! செய்வர்களுக்கு புற்று நோய் வருகிறது..."

மேற்படி அறிவிப்பை சென்னை நகரின் பல்வேறு இடங்களில் இந்து முன்னணியினர் அண்மையில் எழுதி வைத்தனர்.

நம்மை அதிர்ச்சியடைய வைக்கும் இச்செய்தி முற்றிலும் தவறானது. விஞ்ஞான ரீதியாக மெய்பிக்கப்படாதது ஏற்கனவே பழமையில் ஊறியிருக்கும் நம்மக்களை இவர்கள் ஏன் இப்படி குழப்புகிறார்கள்?

"குடும்பக்கட்டுப்பாடு" என்பது ஒரு பொருளாதார கொள்கை. அரசு இத்தவறான அறிவிப்புகளைத் தடுக்கா விட்டால், கோடிக்கணக்கில் பணம் செலவழித்தும் கு.க பிரச்சாரம் செய்வதில் அர்த்தமில்லே. — சி. இரகுராமன் ◆

FREE E- BOOKS , www.thamizham.net.,

எங்களூரின்

# அரியும் பிரச்சனை

இந்தியாவுடன் இன்னும் எங்கள் கிராமம் இணைக்கப்படவில்லை... ஆனாலும் நாங்கள் தேர்தல் தோறும் வாக்கு அளித்திட தவறுவதில்லை.

'அகமலை' — போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஏலமும் — காப்பியும் விளைந்திடும் — ஒரு மலைக் கிராமம்... இருபத்தைந்து ஆண்டுகளாய் தனி ஊராட்சி. ஆனால் இங்கு வர போடி நாயக்கனூரிலிருந்து 25 கி.மீ. தூரம் நடந்து மட்டுமே மலையேற வேண்டும். மலையின் மறுபுறமுள்ள பெரியகுளம் செல்லவும் 15 கி.மீ. மலையில் நடந்து மட்டுமே செல்ல வேண்டும்.

தபால் — தலைச் சுமையில் வருகின்றது... அரிசி பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் கழுதை, மட்டக்குதிரைகளின் முதுகில் கொண்டு வரப்படுகின்றன... விவசாய விளை பொருட்களும்... கழுதை... குதிரைகளை நம்பியே ஊருக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

ஊரில் கிலோ ஐம்பது பைசாவிற்கு விற்கப்படும் சமையல் உப்பு 40 பைசா சுமை கூலி 10 பைசா லாபம் — இதற்குப் பின்னா இங்குள்ள கடையில் ஒரு ரூபாய்க்கு விற்கப் படுகின்றது.

அநேகமாய் இந்தியா முழுவதும் ஒரே விலையில் விற்கப் படும் ரேசன் பொருட்களான அரிசி, கோதுமை, ரவை, மைதா, ஜீனி, ம. எண்ணை... இங்கு கிலோ ஒன்றிற்கு நாறபது பைசா அதிகமாய் சுமைகூலியாக ரசீது இன்றி வாங்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. தட்டிக்கேட்டால் 'ரேசன்' கடையே எங்களை விட்டுப் போய் விடுமோ என்ற பயம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

அரசாங்கத்தால் மட்டுமே போட இயலும் சாலையினை காரணம் காட்டி எங்களூரின் எல்லாவிதமான தேவைகளும் மறுக்கப்படுகின்றன... நாங்கள் நடக்கும் ஒற்றையடிப் பாதைகூட பத்து ஆண்டுகளாய் செப்பனிடப்படாமலிருக்கின்றது.

இந்த ஊமை கிராமத்தினரின் அழுகை இன்னமும் சட்ட மன்ற பாராளுமன்ற கட்டிடம் வரை கேட்கவில்லை. ஏனெனில் எங்களூருக்கு இன்றுவரை பாராளுமன்ற உறுப்பினர் வந்ததேயில்லை... பத்து ஆண்டுகளாய் சட்டமன்ற உறுப்பினரும் வரவில்லை.

அதனால் தான் கூறுகின்றோம்... இன்னமும் நாங்கள் இந்தியாவுடன் இணைக்கப்படவில்லை... ஆனாலும் நாங்கள் தேர்தலில் தவறாது 'வாக்கு' அளித்திட தவறுவதில்லை. ஏனென்றால் இந்த ஜனநாயகத்தின் மேல் எங்களுக்கு அளவு கடந்த நம்பிக்கை! oooooooooo — எஸ்.வி.ரி. வீரக்குமார்


## எந்த ஐயத்திற்கும் பதில்-2ரூபாயில்!

**'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் கூட்டு பதிலாளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.**

**இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா? கேளுங்கள்**

✷ புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக

✷ "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?


✷ 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?

✷ வீட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?

✷ உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?

**கேள்வி ஒன்றுக்கு ரு 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம் எழுதுக: கூட்டு பதிலாளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040**


FREE E- BOOKS , www.thamizham.net.,



## முதலமைச்சரின் புகார் பிரிவு

# செயல்படும் விதம்

தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் அரசின் அலுவலகங்களில் நடைபெறும் தவறுகள் காலதாமதம் பற்றி பொதுமக்களின் புகார்கள் பற்றி விசாரிக்கவும் பொதுமக்களுக்கு விரைவில் நன்மை கிடைக்கச் செய்யவும் ஒரு புகார் பிரிவு அமைக்கப்பட்டு இயங்கி வருவது அனைவரும் அறிந்ததே.

ஆயின் அப்புகார் பிரிவு பொது மக்களின் புகார் கடிதங்களை தவறு செய்த அல்லது கால தாமதத்தை வளர்க்கும் தொடர்புள்ள அதிகாரிகளுக்கே திரும்ப அனுப்பி புகார் தாரருக்கு தக்க பதில் அனுப்புமாறு கோருவதோடு தனது பொறுப்பு முடிந்துவிட்டதாக கருதி செயல்படுகிறது.

புகார்கள் விஷயமாக தொடர்புள்ள அதிகாரிகளிடமிருந்து விளக்கம் பெற்று பொது மக்களுக்கு நியாயம் கிடைக்க வழி செய்யாது, குற்றவாளியை நியாயம் வழங்குமாறு கோருவதோடு தனது பொறுப்பு முடிந்துவிட்டதாய்க் கருதுவதால், புகார் செய்தவர்களுக்கு நியாயம் கிடைக்காததுடன், மெத்தனமும் ஆணவப் போக்கும் நிறைந்த சில அரசுத் துறை அதிகாரிகளின் தவறான நடவடிக்கைகளினால் லஞ்ச ஊழலும், காலதாமதமும் அலட்சியப் போக்கும் அதிகரிப்பதால் புகார் செய்தவர்களை மேலும் கொடுமைக்கு ஆளாக்குகிறது.

"நீ அரசுக்கு அனுப்பிய புகார் கடிதம் எங்கே இருக்கிறது பார்த்தாயா?" என்று புகார் கடிதத்தினை கையில் வைத்துக் கொண்டு புகார் செய்த பொது மக்களை மிரட்டும் அளவுக்கு நிர்வாகத்தில் ஒழுங்கீனமும் வளர்ந்துள்ளது.

இந்நிலை மாற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புகார் பிரிவின் நடவடிக்கைகளைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்தால் புகார் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதன் நலன்கள் பொது மக்களுக்கு ஓரளவுக்காவது கிடைக்க வாய்ப்பு உள்ளது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

(1) பொதுமக்களின் புகார்களின் மீது தக்க விளக்கத்தினை அனுப்புமாறு புகார் பிரிவின் தவறு செய்த/காலதாமதம் செய்யும் அரசுத்துறை அதிகாரிகள் கோருதல் வேண்டும்.

(2) அதிகாரிகள் தரும் விளக்கங்களின் அடிப்படையில் பொதுமக்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் தகுந்த உத்திரவுகளை பிறப்பிக்க புகார் பிரிவினை சற்று விரிவு படுத்தி அமைத்தல் வேண்டும்.

(3) புகார் செய்வதால் லஞ்ச ஊழல், கால தாமதக் கொடுமைகளும் அதிகமாக வளருவதால் இப்படி ஒரு நிர்வாகம் தேவைதானா என பொது மக்கள் பய உணர்வுடன் மனம் கலங்கி செயலற்றவர்களாய் நிற்கும் மக்களாட்சிக்கு முற்றிலும் புறம்பானதோர் கேவலநிலை அறவே களையப்படும் வகையில் புகார் பிரிவின் செயல்பாடுகள் சிறப்பாக அமையும் வகையில் அரசுப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

பொதுமக்களின் புகார் மீது அரசுக்கு பதில் அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் நாம் தண்டிக்கப்படுவோம் எனும் பய உணர்வு,அரசுத்துறை அதிகாரிகளுக்கு ஏற்படுமாறு புகார் பிரிவு செயல்படத் துவங்கிவிட்டாலே பல அதிகாரிகள் தவறுகளை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயல்படத் துவங்கி விடுவார்கள் எனக் கருதுகிறோம். — மோகன்

•முதன் முறையாக வெளியிடுகிறோம்!
புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்!

- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

தொடர்புக்கு:
**வேல் டைப் பௌண்டரி**
38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை – 7.
தொலைபேசி: 664293

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கருத்தடை கட்டாயத்தால்

# கஷ்டப்படுவோரின் கண்ணீர் கதை

குடும்ப கட்டுபாடு (கருத்தடை) நல்ல திட்டம் தான் ஆனால் அதைக் கட்டாயப்படுத்தும் போது கருத்தடை செய்து கொள்பவர்களை விட அதற்காக மகப்பேறு செவிலியர்கள் படும் அல்லல்கள் வரையறுக்க முடியாவை.

மாதத்திற்கு 10 பேர் ஒரு செவிலியர் மூலம் கருத்தடை செய்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் மெமோ. மூன்று முறை மெமோ பிறகு வேலை நீக்கம் என்று பயமுறுத்தப்படுகிறார்கள். அரசு பணமில்லாமல் செவிலியர்களிடம் தாய்க்குலம் குறைந்தபட்சம் கேட்பது ரூ.100.00ம் ஒரு ஆர்லிக்ஸ் புட்டியும் குறைந்தபட்சம் 6 பேர் செய்து கொண்டால் இவர்களுக்கு செலவு செய்ய செவிலியர் வாங்கும் சம்பளம் சரியாக போய்விடும். அவர்களின் மாத சம்பளம் ரூ.756.00 இவர்களின் இவ்வளவு கஷ்டத்தில் எந்த மாவட்டத்தில் கருத்தடை அதிகமாக செய்யப்படுகிறதோ அந்த மாவட்ட அதிகாரிக்கு உலகம் முழுதும் குடும்பத்துடன் சுற்ற இலவச "பாஸ்போர்ட்" மேலும் தங்கப்பதக்கம். ஆனால் அதிகமான கருத்தடைக்கு ஆள் பிடித்த செவிலியர்களுக்கு ஒரே ஒரு "உஷா தையல் மெஷின்".

சமீபத்தில் ஒரு ஊரில் குடிநீர் வேண்டி மனு கொடுத்த போது 'கருத்தடை' அதிகமாக செய்ய அனைவரும் முன்வந்த பிறகு தான் "குடிநீர்" கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறார் ஒரு அதிகாரி.

நேர்மையான பிரச்சாரமும் விரும்பியவர்களுக்கு மட்டுமே கருத்தடை செய்யப்படுவதும் தான் மக்களுக்கும் பணியாளர்களுக்கும் சிறந்த திட்டமாக இருக்கும். இல்லையெனின் மக்களிடம் தவறான கருத்து ஏற்பட்டு பயமும். பீதியான நிலைமையும் உருவாகி அத்திட்டமே சிதைந்து போக வழி செய்து விடும். ~~~~~— நன்றி: 'நடைபாதை

FREE E- BOOKS , www.thamizham.net.,

# பலாத்கார கருத்தடை

எல்லா மாவட்டக் கலெக்டர்களும் குடும்பக் கட்டுப்பாடு நலத்திட்டத்திற்கு உதவ கடுமையாக வற்புறுத்தப்படுகிறார்கள் அரசு மூலம். அது மாதிரி பெரியார் மாவட்டத்தில் 'பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு ஆட்களைப் பிடித்து வர' அம்மாவட்ட கலெக்டர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார். இது சம்பந்தமாக சத்திய மங்கலம், ஈரோடு மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் எல்லா ஆசிரியர்களும் தங்கள் தொழிலையும் விட்டு விட்டு ஆட்களைப் பிடிக்க ஓடுகின்றனர். சுற்று வட்டாரத்திலுள்ள மலை வாழ் மக்கள், கிராமவாசிகள், முதியோர்களைப் பிடிக்கவும் நகரங்களிலுள்ள அப்பாவி மக்களை ஏமாற்றி அழைத்து வரவும் இவர்கள் கடுமையாக ஏவப்படுகின்றனர். கிராமங்களிலும் சுற்று வட்டாரத்திலும் இதற்கென்று தரகர்கள் வேறு இருக்கிறார்கள். ஓர் ஆளைப் பிடித்துக் கொடுத்தால் ரூ.25 முதல் ரூ.50 வரை தரப்படுகிறது; அல்லது அவர்கள் கேட்கிறார்கள். அறுவை சிகிச்சை செய்து கொள்ள வருபவர்கள் பெண்ணாக இருந்தால் ரூ.155—ம் ஓர் எவர்சில்வர் டிபன் கேரியரும் தருகிறார்கள். ஆணாக இருந்தால் ரூ.130—ம் ஓர் எவர்சில்வர் கேரியரும் கொடுக்கப்படுகிறது — அரசாங்கம் மூலமாக.

இதுபோக, வலுக்கட்டாயமாக பிடிக்கப்படும் நபர்கள், பிடிக்கவரும் ஆசிரியர்களிடம் ரூ.200, 300 முன் பணமாகக் கேட்கிறார்களாம். அப்படி ஆசிரியர்கள் பையிலிருந்து ஓர் ஆளுக்கு நிறையபணம் கொடுத்துப் பிடிக்க வேண்டியிருக்கிறதாம். இதற்குக் கூட இங்கு ஆட்கள் கிடைப்பது அரிது என்கிறார் ஓர் ஆசிரியர். ஒரு குடும்பத்தில் கணவன் — மனைவி இருவருமே ஆபரேஷன் செய்து கொண்டவர்கள் இங்கு ஏராளம்.

இம்மாவட்டத்திலுள்ள குடும்பக்கட்டுப்பாடு நல அதிகாரிகள் பாமரர்களிடம் நிறைய பொய் வாக்குறுதிகளையும் அள்ளி வீசுகின்றனர். உதாரணமாக: நிலப்பட்டா தருகிறோம்.

ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் குறைந்த ஊதியத்தில் கட்டாயக் கருத்தடைக்கு ஆள்பிடிக்க பணம் செலவாவதோடு தாங்கள் கற்பிக்கும் தொழிலையும் விட்டு விட்டு கல்விக்கும், மாணவர்களுக்கும் பங்கம் விளைவிப்பதோடல்லாமல் மக்கள் சிலரை ஏமாற்றவும் செய்ய வேண்டியிருக்கிறது. இவர்களின் இழிந்த நிலையின் கூவல்கள் அரசு செவிகளைக் கிழிக்குமா?

— கோ. கோ. சீனிவாசன்,

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஈழ விடுதலை



பிணைத்த விலங்குகளைத்
தகர்க்கும் ஈழப்போரில்
ஏகாதி பத்தியம்
எந்த வேடத்தில் நுழைந்தாலும்
வெல்லப் போவது மக்கள் மட்டுமே...


ஈழத்தின் விடுதலைப் போரில் தனித்தனியாய்ப் போராடிக் கொண்டிருந்த முன்னணிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஸ்ரீலங்கா அரசுடன் மோதுகின்றன. பேச்சு வார்த்தைகள் மூலம் சீரான முடிவு என்றெல்லாம் அறிக்கைகளை விட்டு, அவற்றை ஒட்டி எதேச்சையாகத் தானே எடுத்துக் கொண்ட முடிவுகளின் படி இலங்கை அரசு அராஜாக வழியைக் கடைப் பிடித்து வருகிறது. சகஜ நிலைக்குத் திரும்ப தமிழர்களை குடியமர்த்தும் திட்டத்தில், தமிழர் வாழும் பகுதிகளில் இரண்டு லட்சம் சிங்கள இனத்தவரையே குடியேற்றியிருக்கின்றது. இதனால் நிலமிழக்கும் பட்சத்தில் விடுதலை அணியினர் ஒன்றும் செய்யவியலாது என்று எண்ணி, அப்பாவி தமிழ்த் தொழிலாளிகளையும், பெண்களையும், சிறுவர், சிறுமியரையும் பாகுபாடின்றி, ஈவிரக்கமின்றி கொலை செய்து வருகின்றது.

உள்நாட்டு இனக்கலவரத்திற்கு அயல்நாடான இந்தியாவின் தலையீடு சரியில்லை என்று கூறிய இலங்கை அரசு தன்னுடைய எல்லா இராணுவ நடவடிக்கைகளுக்கும் ஏகாதிபத்திய அல்லது முதலாளித்துவ நாடுகளின் காலைப் பிடித்துக் கொண்டிருப் பது ராஜ தந்திரம் என்று பேராம்!

உலக சமாதானத்தின் எல்லைகள் சுருங்கிக் கொண்டும், அணு ஆயுதத்தாலும், மனித குலத்தின் மீது ஒருதலைப்பட்ச மான ஏகாதிப்பத்தியம் அல்லது முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்தி வருவதும் கண்கூடாகிறது. இனி இரக்கத்திற்கு

FREE E- BOOKS , www.thamizham.net.,

## ஈழம் எங்கள் தாகம்!



ஓ! ஈழத் தோழனே!
உனக்காக
உரத்த குரலெழுப்ப
குரலிருந்தாலும்
என் இதயம்
என்னை கேலி செய்கின்றது!
நாங்களோ அடிமைகளடா!
மூவேந்தர்க்கும் அவர் தம்
வழித் தோன்றல்களுக்கும்
முகலாயர்களுக்கும் அவர் தம்
குலாம்களுக்கும்
ஆங்கிலேயர்களுக்கும்
சுதந்திர இந்தியாவிற்கும்
அதன் வியாபார
அரசியல் வாதிகளுக்கும்
நிரந்தர அடிமைகளே!
உனது விடுதலைக்காக
என்ன செய்துவிடப்
போகிறோம்? 'செந்தூரம்

இடமில்லை என்று இறங்கிவிட்ட ஈழ விடுதலை முன்னணியினரின் வெற்றி வெகு தூரத்தில் இல்லை என்பதை தெளிவாக உணர்ந்து செயல்பட்டு வருகிறது. இலங்கை அரசாங்கம் வருவதை எதிர்கொள்ள தயார் செய்து கொள்ளட்டும். ஆனால் இனியும் அதற்கு அவகாசம் உண்டா என்பதுதான் சந்தேகம். மதம், மொழி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசியலை அமைத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளின் அமைப்புப் பிடியிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள ஈழவிடுதலை மனித சமுதாயத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாஇருக்கும் என்பது நிச்சயம்.

— வல்விராஜன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## புத்தகப்பிரிவு




# ஆன்ம ஓவியம்

புரட்சிக்காரனின் காதல். தோல்வியில் தான் முடியும். ஆனால் அவனும் மனிதன் தான் என்பதால் அவனால் காதலுக்காக — காதல் வெற்றிக்காக போராடாமல் இருக்க முடியாது. இந்நாவலில் புரட்சிக்காரனின் காதல், மண முயற்சியாக உருவெடுக்கும் பொழுது வக்கிரம் நிறைந்த வர்க்க புத்திக்காரர்களால் அக்காதல் — எவ்விதம் சதி செய்யப்பட்டு சிதைக்கப்படுகிறது. பின்னர் அதுவே புரட்சிக்காரன் பாலகுமார் சித்திரவதை செய்யப்பட்டு மரணத்தை தழுவுவதற்கும் காரணமாக அமைகிறது என்பது தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பாலகுமாரின் அழியாத காதல் உணர்வுகள் அவனது வாய்மொழியாகவே சிறப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்: டி.எஸ். ரவீந்திரதாஸ்

வந்தனா பதிப்பகம்,
5—ஏ. இரண்டாவது குறுக்குச் சந்து,
கங்கையம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை — 600 026.

விலை ரூ 11.00

[redacted]

FREE E- BOOKS , www.thamizham.net.,

"என் உடம்பில் இருக்கிற
ஜீன்களை எடுத்து டெவலப் செய்தா
பாலகுமார்கள் வரமாட்டான்கள்.
லட்சக்கணக்கான கண்ணகிகளைத்
தான் நீ பார்க்க முடியும்."

"உடல் என்ற கூட்டுக்குள்,
உள்ளம் என்ற கண்ணாடிப் பேழை
இருக்கு. அதற்குள் உயிர் என்ற
சூட்சுமப் பொருள் இருக்கு.
அதோடை ஒட்டியிருக்கிறது தான்
ஆன்மான்னு விவேகானந்தர்
சொல்வார். கூடுதலா என்னுடைய
ஆன்மாவிற்குள்ளேயும் கண்ணுக்குப்
புலப்படாத ஒரு வஸ்து இருக்கு. அது
தான் கண்ணகி. இந்தக் கண்ணகிக்கு
வயசு கிடையாது. நோய் நொடி
கிடையாது. சாவே கிடையாது.

"எண்ணங்களால் வாழ்கிறேன்.
இதனுல் யாருக்கும் பாதிப்பில்லை.
கண்ணகி உட்பட! ஒருகையில்
என்னைத் தாக்க வரும்
குண்டாந்தடியை தடுத்துக்
கொண்டே இன்னொரு கையால்
எனக்குள் இழைந்து கொண்டிருக்கும்
கண்ணகிக்கு பூச்செண்டு கொடுத்துக்
கொண்டிருப்பேன். குண்டாந்தடி
இந்த சமுதாயத்திற்காக. பூச்செண்டு
என் காதலுக்காக!

பணவெறி, ஜாதிப்பித்து,
வக்கிரபுத்தி ஆகிய சமுதாயத்தின்
கொடுங்கோலர்களால்
வஞ்சிக்கப்பட்டு அனைத்தையும்
இழந்து விட்ட கண்ணகி
வெறுப்பூட்டும் தளைகளினின்று
வெளியேறி காதலுடன் இணைந்து
அவனுக்கு பணிவிடை செய்ய
விரும்பும் கட்டத்தில் காதலை விட
சமுதாய மாற்றமும் அதற்கென
வரம்புகளை மீறாது போராடுவதும்
அவசியம் என்பதை பாலகுமார்
உணர்த்தத் தவறவில்லை.

"உலகின் எங்காவது ஒரு
மூலையில் எப்போதுமே என்னைப்
போன்ற இளைஞர்கள் புதிய
விடியலுக்காக போராடிக் கொண்டு
தான் இருக்கிறார்கள். இவர்களில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பெரும்பாலானவர்கள் என்னைப்
போல் காதலித்தது கிடையாது.
அந்தக் காதல் நினைப்புகளில்
லயித்துக் கிடக்கவும் நேரம்
கிடையாது. அப்படியிருக்கையில்
எனது நேரத்தின் கணிசமான
பகுதியை கடந்து போன காதல்
நினைவுகளுக்கு பலியிடுவது
தவறானது என்றே தோன்றுகிறது''

பாலகுமாரின் வருங்காலம்
பற்றிய கணிப்புகளாவன:

''எந்த கிராமத்திற்கு பஸ் விட
வேண்டுமென்று போராடினோமோ
அதே கிராமத்தில் இருந்தே நமது
பிள்ளைகள் சந்திர மண்டலத்திற்கு
ராக்கெட்டில் சொல்வார்கள் என்று
கற்பனை செய்கிறேன்.

''எங்களின் ரத்தமும்
வியர்வையும் சுரண்டலற்ற சொர்க்க
பூமியின் அலங்கார வாசலையே
அபிஷேகிக்கின்றன. அதன்
கதவுகளை எமது தியாகங்கள் திறவு
கோலாய் மாறி திறந்து வைக்கின்றன.

பசியைப் புரிந்து கொள்ள முடியாத
— பட்டினிக்கு அர்த்தம் தெரியாத —
நோய்களை விளையாட்டாகக்
கருதுகிற சமர்த்துப் பிள்ளைகள்
சண்டையில்லாமல் சந்தோஷித்து
அங்கே விளையாடுவார்கள்.
கத்தியும் கடாரியும், துப்பாக்கியும்,
தோட்டவும், அணுகுண்டும்
ஏவுகணையும் காட்சிப் பொருளாய்த்
தான் அங்கே அணிவகுத்து நிற்கும்.
ஓ...! அத்தகைய உன்னத
சமுதாயத்தை தரிசிக்கவிருக்கும்
வருங்கால இளைய தலைமுறையே...
நீ வாழ்க மேலும் வளர்க...''

காதல் உயர்ந்தது, சமுதாய
மாற்றம் அதனினும் உயர்ந்தது
என்கிற வகையில் இந்நாவல்
புனையப்பட்டுள்ளது.

'வெங்கட் — மோகன்'



FREE E- BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

தங்கள் மே 85 இதழில் 'ஆகாத அகம்பாவம்' கட்டுரையில் கடுமையான சொற்பிரயோகம் செய்திருக்கிறீர்கள். நடுத்தர வகுப்பு ஊழியர்களை மிகக் கடுமையாய்ச் சாடி இருக்கிறீர்கள். குறைகளைக் கூற உரிமையுண்டு. ஆனால் சொல்லும் முறையில் குறை இருக்கக் கூடாது! — வளவ. ஆச்சர்யன், மன்னார்குடி.

'அண்ணா என்கிற மனிதர்' என்ற கட்டுரையில் அறிஞர் அண்ணா அவர்களை அளவாக அதே சமயத்தில் பாரபட்சமற்ற நிலையில் சீர்தூக்கி சிறப்பாக எழுதியுள்ளீர்கள்.

— சு.கல். சுந்தரம், ஈரோடு — 2.

'தேர்வு முறை' அட்டைப்படம் அருமை. வரும் இதழ்களில் அதனைப் பற்றிய தெளிவான கட்டுரையை எதிர்பார்க்கிறேன்.

— கா. மனோகரன், மதுரை — 1.

சுட்டி பாரதியின் 'தமிழா இது' கட்டுரை படித்தேன். தமிழுக்காக — தமிழருக்காகக — தமிழகத்துக்காக வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தலைவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

— எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

நடைபாதைகளில் கோயில்களா? என்ற கட்டுரை படித்தேன். நமது தலைநகர் சென்னையில் நடைபாதைக் கோயில்கள் மறையும் நாள் எந்நாளோ?

— எம்.பி. இளங்கோ, பி. மேட்டுப்பாளையம்.

கடத்தல் மன்னன் ஹாஜி மஸ்தான் சொல்றது நூற்றுக்கு நூறு சரியென்று தான் எனக்குத் தோன்றது சார்!

— இரா. புவனேந்திரன், திருவொற்றியூர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது தேன் மருத்துவம்

● ஒரு நாளைக்கு குறைந்தது 2 தேக்கரண்டி தேன் பருகினால் கீழ்க்கண்ட நோய்கள் வராமலும், வந்தால் குணமாக்கிக் கொள்ளவும் முடியும்:

சீரணம், வயிற்று உறுப்புகள் சம்பந்தப்பட்ட நோய்கள் — இதயம் நுரையீரல் கோளாறுகள் — நரம்பு தளர்ச்சி — சிறுநீரகம் சம்பந்தப்பட்டவை — இரத்த சோகை — தூக்கமின்மை, பல், தொண்டை, காது, கண் நோய்கள் — சருமத் தொல்லைகள் — விஷக்கடி (நீண்ட பட்டியல்... ஆனால் இடமில்லை) நம்பகமான ஒரே சர்வரோக நிவாரணி தேன்!

● நூறு ஆண்டுகள் வாழ வழி வகுக்கும் பொருள் தேன். 123 வயதில் 74 மைல் நடந்த ஒரு மனிதர் இதனைத் தினமும் உண்டதாகப் பேட்டியளித்துள்ளார். இவரது 98 வயதில் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. 100 வயதிற்கு மேல் வாழும் 200 பேரை பேட்டி கண்டதில் இவர்கள் தினமும் தேனை உண்பதாகத் தெரிகிறது.

● இதயத்திற்கு வலிமை அளிக்கும் ஒரே பொருள் தேன்.

**இதுவரை நமது மருத்துவம் (இதழ் எண்களுடன்)**

4 — வாழைப்பழம்; 6 — கத்திரிக்காய்; 7 — நெல்லிக்காய்;
8 — துளசி; 10 — பப்பாளி; 12 — காரட்; 17 — மாம்பழம்;
18 — தக்காளி; 19 — திராட்சை; 20 — கொய்யா;
21 — ஆப்பிள்; 22 — முருங்கை; 23 — அவரை; 24 — கீரை;
25 — அன்னாசி; 26 — புளியம்பழம்; 27 — சந்தனம்;
28 — மல்லிகை; 29 — வெற்றிலை; 30 — ரோஜா;
31 — மிளகாய்; 32 — சுண்ணாம்பு; 33 — முட்டை;
34 — தேங்காய்; 35 — கசகசா; 36 — உப்பு; 37 — வெங்காயம்;
38 — பூண்டு; 39 — இலந்தை; 40 — பேரீச்சம்; 41 — மாதுளம்;
42 — தண்ணீர்; 43 — எலுமிச்சை; 44 — சீரகம்; 45 — எள்;
46 — பால்; 47 — தாமரை; 48 — மஞ்சள்; 49 — இஞ்சி;
50 — விளாம்பழம்; 51 — மிளகு.

FREE E- BOOKS , www.thamizham.net.,

● உடல் பருமனைக் குறைக்க எளிய வழி தேன். காலையில் தினமும் தொடர்ந்து வெறும் வயிற்றில் 2 தேக்கரண்டி தேன் அருந்தினால் பலன் உறுதி.

● மிகக் களைப்பான நிலையில் ஒரு தேக்கரண்டி தேன் அருந்திப் பாருங்கள். காப்பி போன்ற செயற்கை விஷமத்தன சுறுசுறுப்பு தேன் அறியாதது. இதன் நிஜமான புத்துணர்ச்சிக்கு 12 செகண்டுகளில் இது இரத்தத்தோடு கலந்து சக்தியாவதே காரணம். ஒரு கிராம் தேன் 3.15 கலோரி ஆற்றல் தருகிறது! இறைச்சி, முட்டை தரும் கலோரி அளவிது. ஆனால் பிற தீமையற்றது.

● பிரசவ வேதனை ஏற்படுமுன் 2 அவுன்ஸ் தேன் பருகினால் சுகப்பிரசவமாகும்.

(நமது வெள்ளரிக்காய் மருத்துவம்) — சித்தன்


# சுகமடைய!

ஆஸ்துமா, எஸ்னோபீலியா, நரம்புத் தளர்ச்சி, சர்ம நோய் மற்றும் எவ்வகை பெரிய நோய்களும் மிக விரைவில் சுகமடைய மூலிகை சிகிச்சை பெற இலவச கடித ஆலோசனை பெறலாம்: முகவரி:

ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்


Dr. C.K. மாணிக்கவாசகம், செலந்தம்பள்ளி P.O., திருப்பத்தூர், TK, (N.A.) - 635653. [PHONE 469 TPT]

அறிவிப்பு: சென்னை, பெங்களூர், வேலூர், சேலம், திருச்சி, கோவை, மதுரை, திருப்பத்தூர் ஆகிய முகாம்களில் சந்திக்க Reply card-ல் எழுதுங்கள்


FREE E- BOOKS , www.thamizham.net.,

## தூக்கு மேடையில் 10

# தோழன் பகத் சிங்



தப்பியோடிய பகத்சிங் மற்றும் தோழர்களை, அரசாங்கத்தார் கண்டு பிடிக்கவில்லை. லாகூரை விட்டு அவர்களைத் தப்ப விடக்கூடாது என்ற முடிவில், நகர எல்லைகளில் பலத்த காவலிடப்பட்டும், அன்று இரவே மூவரும் லாகூரை விட்டுத் தப்பிவிட்டனர்.

சன்னியாசிகளோடு சன்னியாசியாய் சந்திரசேகர ஆசாத், மாறுவேடமிட்டு வெளியேறினார். கோட்டும், தலைப்பாகையுமாக பெரிய துரையைப் போல பகத்சிங்கும், அவரது மனைவியைப் போலப் பகவதிசரணின் மனைவியும், கல்கத்தா புறப்பட்டனர். பகவதிசரணின் மூன்று வயதுக் குழந்தை சசீந்திராவைத் தூக்கிக் கொண்டு, அவர்களின் வேலைக்காரனாக, ராஜகுருவும் அந்த ரயிலில் புறப்பட்டார்.


எல்லோரும் தப்பிவிட்டனர்!

ஏறத்தாழ அடுத்த ஆறுமாதம், மற்ற வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, இவர்களைத் தேடுவதையே வேலையாக வைத்துக் கொண்டும் கூட, அரசாங்கம் தோற்றது. கடைசி வரை யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

1929 ஏப்ரல் மாதம் 9ஆம் தேதி —

தொழிலாளர்களுக்கு எதிரான தொழில் தகராறு மசோதாவையும், மக்கள் பாதுகாப்பு மசோதாவையும், சட்டமன்றம் நிறைவேற்றவிருந்த அந்தத் தருணத்தில், பார்வையாளர் வரிசையிலிருந்து இரண்டு இளைஞர்கள் எழுந்தனர். அடுத்த நொடி, இரண்டு வெடிகுண்டுகள் வெடித்தன. பிறகு, ''இன்குலாப் ஜிந்தாபாத்'', ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என முழக்கமிட்டனர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,



சட்டமன்றம் முழுதும் ஒரே ரகளை. பாத்ரூம் பக்கம் சிலர் ஓடினர். மேசைக்கடியில் சிலர் ஒளிந்து கொண்டனர். வெடிகுண்டை வீசிய பகத்சிங்கும், பி.கே. தத்தும் அதே இடத்தில் நின்றபடி முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். தப்பியோட முடியவில்லை. இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

சர் பொம்மன்ஜி தலால், சர் ஜார்ஜ் ஸ்கஸ்டர், எஸ்.சி. குப்தா மற்றும் சிலர் காயமடைந்தனர்.

''செவிடர்கள் காதில் உரக்கச் சொல்லவே இந்த வெடிகுண்டுகள்'' என்று தொடங்கும் நீண்ட அறிக்கையின் துண்டுப் பிரசுரங்களைப் பகத்சிங் சட்டமன்றத்தில் வீசியெறிந்தார். ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசுச் சங்கத்தின் சார்பாகத் தயாரிக்கப்பட்டிருந்த அந்த அறிக்கையின் இறுதியில் ''பால்ராஜ், காமண்டர்—இன்—சீப்'' என்று போட்டிருந்தது.

ஏப்ரல் 11ஆம் தேதி, இங்கிலாந்து நாட்டுப் பேப்பர்களில், ''டெல்லி சட்டமன்றக் குண்டு வீச்சுக்குப் பின்னால், மாஸ்கோ இருக்கிறது'' என்று செய்தி வெளியானது. நம் நாட்டிலிருந்தும், திரு. சி.பி. ராமசாமி அய்யர், அக்கருத்தை ஆதரித்து அறிக்கை வெளியிட்டார்.

''யாரோ பைத்தியக்காரனின் வேலை என்றே என்னால் நினைக்க முடிகிறது'' என்றார், ஜவஹர்லால் நேரு!

சாயந்திபுரம், ஜமீன்தார் மாளிகையில் விருந்தினராகத் தங்கியிருந்த, காந்தியும், இதனைக் கண்டித்து அறிக்கை விட்டார். எல்லா அறிக்கைகளும் 11.04.1929 ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' நாளிதழில் (பக்கம் 4 மற்றும் 7) வெளியாகியுள்ளன.

(அடுத்த இதழில் முடியும்) —— சு.ப. வீரபாண்டியன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இரண்டு போதும்!



இது என்ன உடற்பயிற்சி செய்வது என்று திகைத்திடுவோர்க்குச் சுருக்கமாகச் சொல்வது! உடல் நலம் பேண, யோகாசனம், சாதாரண உடற்பயிற்சி, கராத்தே, மற்போர், ஓட்டம், நீச்சல், பளுதூக்கல் போன்றவை ஏராளமாக இருக்கின்றன. இவற்றில் எவற்றைச் செய்வது என்று புரியாமல் இருப்பவர்களுக்கு, கீழே வரும் இரண்டு உடற்பயிற்சிகளே போதுமானவை.

முதியோர்க்கும் கருமகளிர்க்கும் நோயாளிகளுக்கும் ஏற்றதோர் உடற்பயிற்சி, நடத்தலே.
சோர்வுற்ற இருதயத்திற்குப் புத்துயிர் அளிக்கும் மாமருந்து. ஊளைச்சதை கரைக்க இது ஒன்றே சிறந்த மருந்து. உடற்பயிற்சி செய்வதால் பசி கூடுவதில்லை. ஆனால் நடத்தலினால் நல்ல பசி உண்டாகும். நடத்தலின் போதே மூச்சுப் பயிற்சியும் (பிராணாயாமம்) செய்யலாம். 2 தப்படி மூச்சு இழுக்கவும். பின் 2 தப்படி மூச்சை நிறுத்தவும். பின் 3 தப்படி மூச்சை லேசாக வெளியே விடவும்.

இனி அடுத்ததோர் உடற்பயிற்சி:

காலையில் விழிப்பு வந்ததும், உடனே படுக்கையில் கிடந்தவாறே செய்யும் உடற்பயிற்சி. இதனை ராமதாஸ் தலைகீழ் — மிதிவண்டி
என்போம்.

முதுகைக் கீழே வைத்து, இடுப்புக்குக் கீழே உள்ள பகுதிகளாகிய இரு கால்களையும் முட்டுக் கொடுத்து மேலே உயர்த்தி மிதிவண்டி விடுவது போலக் கால்களை மாறி மாறி உதைக்கவும். இவ்வாறு 5 நிமிடம் செய்தால் போதும்.

எனவே பல்வேறு உடற்பயிற்சியும் செய்ய முடியாதவர்கள் உடல் நலம் பேண, மேலே கூறிய 2 உடற்பயிற்சிகளைச் செய்தாலே போதுமானது. ~~~~~~~~~~~ கட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

கல்லூரிக் கனவுகள் — கவிதைத் தொகுப்பு (2.00) — தொகுப்பாசிரியர் என். மனோகரன், நிலவு வெளியீடு, 14ஏ12 ராசலிங்கபுரம், செங்குந்தபுரம், கரூர் 639 002.

மு. தளையசிங்கம், ஒரு அறிமுகம் — கட்டுரைகள், சுந்தர ராமசாமி, பொன்னம்பலம் — சமுதாயம் பிரசுராலயம், கோவை — 15. விலை: குறிப்பிடவில்லை.

மூன்று தினங்களில் அச்சுத் தொழில் (10.00) நாரா. நாச்சியப்பன் — தமிழாலயம், 137, ஜானி ஜான்கான் தெரு, சென்னை — 17.

ஆண் பெண் குழந்தைகளுக்கு தமிழ் மருத்துவம் (6.00) — சஞ்சீவிராயன் — மயிலவன் பதிப்பகம், 7. எம்.கே.அம்மன் கோயில் தெரு, மயிலை, சென்னை — 600 004.

அதிகார மாற்றம் — வரலாறு (30.00) கொடுமுடி ராஜகோபாலன் — ஸ்டார் பிரசுரம், 72, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை — 5.

சுற்றுப்புறச் சூழல் (1.00) — சமூகச்சிந்தனை வளர்ச்சி மையம், 76, என்.ஜி.ஓ. காலனி, திண்டுக்கல் 624 009.

....... அப்பால் ஒரு ராஜ வீதி (9.00) பூஜைக்கு சில ரோஜாக்கள் (8.00) — என்.ஆர். தாசன், பத்மா பதிப்பகம், 53, என்.ஜி.ஓ. காலனி, குரோம்பேட்டை, சென்னை — 44.

தாமஸ் ஆல்வா எடிசன் (3.75) — ஜெ.சி. தெய்வசிகாமணி — பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக் குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை — 4.

யூனிவர்சல் எலக்ட்ரானிக்ஸ் ஆங்கில மாத இதழ், 18, ரங்கநாதன் தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை 600 044. ஆண்டு சந்தா ரூ.10/—

நிஜத்தின் குரல்கள் (1.00) — இரா. இராஜ வேலுச்சாமி, கருத்தவேந்தல், பாண்டிக்கண்மாய், பரமக்குடி 623 707.

கண்ணீரின் காயங்கள் (4.50) அ.மு. தமிழினியன் - சத்யஜோதி இல்லம், 20/106, ஈஸ்வரன் கோயில் வீதி, கோட்டை, கோவை 641 001.

இன்னமும் இருக்கிறது (5.00) — சிவசக்தி — கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தி. நகர், சென்னை — 600 017.


இயற்றமிழ்

கவிதை
கட்டுரை
கதை

(திறனாய்வு திங்களிதழ்)

என்றும் முன்றடுக்கு மொழி மாலையில் ஒட்டடை அடிக்கிறோம்.

திரைப்படத்தை - அரசியலைத் திறனாய்வு செய்யும் இதழ்களை எடை போடுகிறோம்.

தனியிதழ் விலை: உரு.1/-
ஆண்டுத் தொகை: உரு.10/-
தொடக்கம் : ஓலை முதல்
முகவர்கள் தேவை

தொடர்பு முகவரி:

இயற்றமிழ்ப் பயிற்றகம்,
திருவாரூர் 610 002.


FREE E- BOOKS , www.thamizham.net.,

பிராமணர் எதிர்ப்பு,
வட இந்திய எதிர்ப்பு,
இந்தி எதிர்ப்பு
போன்ற துவேஷங்களை
வைத்தே நடத்தப்பட்ட கட்சியை
உருவாக்க இட்லரின் பாசிச
கட்சியே அண்ணா
போன்றவர்களுக்கு
வழிகாட்டியாக அமைந்தது.



இந்த துவேஷங்கள், இவற்றால் பாதிக்கப்பட்ட இலட்சக் கணக்கானோரின் ஆதரவை அண்ணாவிற்கு அளித்தாலும், இதில் உள்ள முரண்பாடுகளும், பலவீனங்களும் அண்ணா உணராததா? உணர்ந்தும்...

● தனியுடைமை ஒழியும் போது தான் உயர்சாதிக் கொடுமைகள், மதம், ஆரிய மாயை உட்பட மறையுமே தவிர, உயர் சாதியினரின் மேல் ஏற்படுத்துகின்ற வெறுப்பினால் அல்ல. மேலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நேரடித் தாக்குதல் தொடுப்பது பிராமணரல்லாத உயர்ஜாதியினரே என்பதே யதார்த்த உண்மை! பிராமணருக்கு எதிராக பிராமணரல்லா தோர் அனைவரும் ஒன்றுபடும் கோஷத்தைப் பெரியாருடன் எழுப்பிய அண்ணா, பிராமணர் அல்லாத பிற உயர்சாதி இந்துக்கள் மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் செய்த அநீதிகளை ஏன் அதே வேகத்தோடு கண்டிக்கவில்லை?



FREE E- BOOKS , www.thamizham.net.,

● தமிழ் மொழி இருக்க வேண்டிய இடத்தை சில நூற்றாண்டுகளாக ஆங்கிலமே கைப்பற்றி வைத்தது. தமிழை அடிமைகளின் மொழியாக பிரகடனம் செய்தவர்கள் ஆங்கிலேயர்! தமிழுக்கு ஆங்கிலம் செய்த இன்னலை விட இந்தி ஒன்றும் அதிகம் செய்துவிட முடியாது. அப்படியிருக்க ஆங்கிலத்தின் மேல் வரவேண்டிய வெறுப்பை அண்ணா இந்தியின் மேல் திருப்பி விட்டது ஏன்?

● திராவிட நாடு தனியாக பிரிய வேண்டுமென்ற எண்ணம் உண்மையில் இருக்குமாயின், தென்னாட்டின் பிற பகுதிகளுக்கும் சென்று தீவிர பிரச்சாரம் செய்யவோ, இக்கோரிக்கையை பிற மொழிக்காரர்கள் ஏற்பார்களா என்று கண்டறியவோ ஏன் முயலவில்லை? தமிழ் பேசுவோர் மட்டுமே முடிவெடுக்கக் கூடிய பிரச்சனை அல்ல இது என்பது தெரியாதா? திராவிட மொழிகள் 12. அதிகமாகப் பேசப்படும் மொழி தெலுங்கு! திராவிடப் பொது மொழி எதுவெனச் சிந்தித்ததுண்டா? "திராவிடம்" என்ற பெயரே ஆரியர் வைத்தது என்ற உண்மை தெரியாதா?

அண்ணாவின் அரசியல் வாழ்வில் 2—வது கட்டம் 1949 இல் தி.மு.க. தொடங்கியதிலிருந்து மலர்கிறது. எந்த அரசியல் கருத்து முரண்பாடுகளுக்காகவும், அல்லாமல், பெரியாருடன் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாகவே தி.மு.க. தொடங்கப்பட்டது.

"திராவிட முன்னேற்றக்கழகம் எந்த விதத்திலும் திராவிடர் கழகத்துக்கு எதிரானது அல்ல; எதிர் நோக்கம் கொண்டதும் அல்ல; கொள்கை ஒன்றே... இரு கழகங்களுக்கும் இரு திக்குகளிலிருந்தும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து, வைதீகக் காட்டை அழித்துச் சமதர்மப் பூங்காவைத் திராவிடத்தில் செழிக்க செய்ய வேண்டும்."

17—9—1949 அன்று ராபின்சன் பூங்காவில் தி.மு.க தொடக்க விழாவில் அண்ணா அறிவித்த கட்சியின் கொள்கை அறிவிப்பு இது!

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆனால் பெரியாருடன் இருந்தபோது உள்ள கொள்கைப் பிடிப்பு அண்ணாவுக்கு தி.மு.க தொடங்கியபின் நீர்த்துப் போவதையே படிப்படியாகக் காண்கிறோம். பெரியாரின் கொள்கையில் இருந்த ஏராளமான ஓட்டைகளை, முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டி அண்ணா அவற்றைத் திருத்தியமைப்பதற்கான அடிப்படை வேலைத்திட்டங்களில் சில மாற்றங்களைக் கொண்டு வந்திருந்தாலோ, அண்ணாவின் புதிய கொள்கை மாற்றம் அவருக்கு வரலாற்றுப் பெருமை சேர்த்திருக்கும்.

ஆனால் அண்ணா செய்தது என்ன? தி.க.வும் தி.மு.கவும் ஒரே கொள்கையுடைய இரட்டைக்குழல் துப்பாக்கி என்று வர்ணித்துவிட்டு ஒவ்வொரு கொள்கையாய் மென்மையாக்குவதையோ, தடம் புரள வைப்பதையோ தான் தி.மு.க தொடங்கிய நாட்களிலிருந்து பார்க்கிறோம்:

- பெரியாருடன் இருந்த போது "நாத்திகம் பேசி நாத்தழும் பேறியவர்" என்று மதவாதிகளின் சாடல் பெற்ற அண்ணா, பின் "ஒருவனே தேவன்" என்று நாத்திக தடத்தை விட்டு சமயச் சீர்திருத்தம் என்ற தடத்துக்கு மாறினார்.

- "தந்திரம், நயவஞ்சகம், இரட்டை நாக்கு, பல்லளித்து நிற்பது" பிராமணர்களின் இயற்கை என்று அந்தணர்களை வசைபாடிய அண்ணா (ஆரிய மாலை: பக்:11) 'நான் பார்ப்பனர்களுக்கு விரோதியல்ல, பார்ப்பனீயத்திற்கே விரோதி' என்று சமரசமாகி, பிராமணர்களையே கழகத்தில் கூடச் சேர்த்துக் கொண்டார். முன்னாள் அட்வகேட் ஜெனரல் வி.பி. ராமன் அப்படி முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அந்தணராவார். →

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச்செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி:—

மைதிலி மோகன்,
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053

FREE E- BOOKS , www.thamizham.net.,



● "அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு" என்று பலகாலம் ஊரெல்லாம் வாய்கிழிய முழங்கிவிட்டு, பிரிவினை தடைச்சட்டம் வரப் போகிறது என்று கேள்விப் பட்டவுடனேயே, அந்த உயிர்க் கொள்கையை குழிதோண்டி புதைத்து விட்டு அதற்கு அழகான உதாரணங்களுடன் சமாதானங்கள் சொன்னார் அண்ணா. முன்பு ஆரிய மாயை எழுதிய கரங்கள் "திரா விடர்களுக்கு மட்டுமல்ல திராவிட நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் கழகம் பாடுபடும்" என்றும் சமாதான மாய் இப்போது எழுதியது.

நேரடி அரசியலிலும், தேர்தலிலும் பங்கேற்க பெரியார் தடை விதித்திருந்தார். துணிவான சீர்த்திருத்தங்கள் செய்ய இவை தடங்கலாகும் என்றார். அண்ணாவின் அரசியல், தேர்தல் நுழைவு — ஆட்சியைக் கைப்பற்றும் ஆசை, பெரியார் எச்சரித்தபடி திராவிட இயக்கத் கொள்கைகளை மெல்ல மெல்ல பலி கொடுத்தே நிறைவேறியது!

எனினும் சமகாலத்து அரசியல் கட்சிகளுடன் ஒப்பிடுகை யில் அண்ணாவின் அரசியல் செயல்முறையில் சில நல்ல அம்சங்கள் மிளிர்கின்றன. தன்னைப் போன்றே தனக்கு அடுத்த அணியில் தலைவர்களை அண்ணா ஊக்குவித்தார். பெரியார் தி.க.வில் பேணிய சர்வதிகாரத்தனம், அண்ணாவால் தி.மு.கவில் ஒழிக்கப்பட்டது. எல்லா ஊர்களுக்கும், மாவட்டங்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கின்ற வகையில் அடுத்த மட்டத் தலைவர்களை அவர் வளர்த்த விதமே கழகத்தின் பலமாகும். பிற கட்சிகள் போல அட்ஹாக் கமிட்டிகளும், நியமனத் தலைவர்களும் அமைக்காது. தேர்தல்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## வயிற்றெரிச்சல் செய்திகள்

* சென்னை அரசினர் மருத்துவமனையில் இருந்த 4 பிண ஊர்திகளும் ஒவ்வொன்றாகப் பழுதாகி விட்டன. இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு 'தனியார்' ஊர்திகள் கொள்ளையடிக்கின்றன.

* அபரிமிதமான கோதுமை விளைச்சல் காரணமாக 5 லட்சம் டன் கோதுமையை வெளிநாடுகளுக்கு விற்க, அரசாங்கம் வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. பட்டினி கிடக்கும் பல கோடி மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கலாமே!

* தமிழ்நாடு மின்வாரியம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தி துறையினருக்கு 90 கோடி ரூபாய் மின் கட்டணத் தொகை பாக்கி தர வேண்டுமாம். ஆனால் அந்தக் கணக்கு சரியானதல்ல என்று மின்வாரியம் மறு அறிக்கை விடுத்துள்ளது.

* இந்த ஆண்டு சாராய உற்பத்தி தமிழ்நாட்டில் 6000 லட்சம் லிட்டர்கள். இது கூட சாதனையா?

ரீதியாக ஜனநாயக முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அண்ணாவைக் குடும்பத்தலைவரின் பாசத்தோடு ஏற்ற கழகத் தம்பிகளின் புரிந்துணர்வே கட்சியின் கட்டுக்கோப்பான செயல்பாட்டிற்கும் 1967இல் ஆட்சியைப் பிடிப்பதற்கும் முக்கிய காரணமானது. '67ல் ஆட்சி பீடமேற அண்ணா ஆடிய அரசியல் ஆட்டங்களும் அதன் தொடர்ச்சியாய் கையில் அதிகாரம் கனிந்த போது நடந்ததும் அண்ணாவின் முடிவான அரசியல் தன்மையை நமக்கு வெளிச்சமாக்கும் அவரது அரசியல் வாழ்வின் 3—வது கட்டமாகும். அது அடுத்த இதழில் (தொடரும்)

—— எழில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# மீண்டும் கேள்வி-பதில்!

வாசகர்களின் இடைவிடாத வேண்டுகோளுக்கிணங்க வரும் ஜூலை இதழ் முதல் "சிந்தனைச் சந்தை" என்னும் பகுதியில் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் தரப்படும். தரமான, சிந்தனையைத் தூண்டக் கூடிய கேள்விகள் எதிர்நோக்கப்படுகின்றன. வாசகர்கள் அஞ்சல் அட்டையில் 'சிந்தனைச் சந்தை' என்று குறிப்பிடவும்.

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 மணியார்டர் செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும் சுட்டி
1494, அண்ணா நகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்களை எண் 1 முதல் 17, 19, 21, 22, 26, 30 தவிர பிற இதழ்களை விலைக்குப் பெறலாம். 50 வது இதழ் 0.75 காசு. மற்ற இதழுக்கு 15 காசு ஸ்டாம்ப் அல்லது தபால்/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் வெளிப்படையாகக் குறைபட்டும் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடியும் காலம் இருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: கு. நாராயணபாரதி, வெளியிடுபவர்: சி. ராமச்சந்திரன். 1494, அண்ணா நகர், சென்னை-40. அச்சிடுவோர்: எஸ். எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 37, Dr நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

விலை: [illegible] JUNE 1985 Regd. No. TN/MS(N)/317
Unpaced to post without prepayment Licence No. TN/MS(N)WPP.58

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)





# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary. secondary and tertiarey sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,